# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## அசல் வழக்கு எண். 143/2020

சாட்சி : DW– 1
பெயர் : திரு. நாச்சியப்பன் தேதி : 03.04.2025

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி**:– (வாதி தரப்பில்)

சாந்தி தனஞ்ஜெயன் என்பவருக்கு மேற்குபுறத்தில் 4,800 சதுர அடிகள் நிலம் ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சுரேந்திரன் என்பவருக்கு கிழபுறத்தில் 4,800 சதுர அடிகள் நிலம் ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. டாக்டர்.சம்பு என்பவருக்கு 11,080 சதுர அடிகள் நிலத்தில் 3 ல் ஒரு பாகம் பிரிந்தது. சுரேந்திரன் என்பவருக்கு 11,080 சதுர அடிகள் நிலத்தில் 3 ல் ஒரு பங்கு பிரிந்தது. சாந்தி தனஞ்ஜெயன் என்பவருக்கும் 11,080 சதுர அடிகள் நிலத்தில் 3 ல் ஒரு பங்கு பிரிந்தது. அவர்களுக்குள் ஏற்பட்ட பாக பத்திரத்தை படித்து பார்க்கவில்லை. வடக்கே கிழமேலாக 30 அடி ரோடு செல்கிறது என்றால் சரிதான்.

1991ம் வருடத்தில் டாக்டர்.சம்பு மற்றும் சுரேந்திரன் ஆகியோர்கள் எழுதிக்கொண்ட பாக பத்திரத்தை பார்த்துள்ளேன். அந்த பாக பத்திரத்தின்படி டாக்டர்.சம்பு என்பவருக்கு "A" அட்டவணை சொத்தும், சுரேந்திரன் என்பவருக்கு "B" அட்டவணை சொத்தும் பிரிந்துள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த பாக பத்திரத்தில் அவர்களுடைய நிலத்திற்கு வடபுறம் 30 அடி சாலை உள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது. சாந்தி தனஞ்ஜெயன் என்பவர் 4,800 சதுர அடி நிலத்தை சுரேந்திரன் என்பவருக்கு விற்பனை செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. சாந்தி தனஞ்ஜெயன் என்பவரிடமிருந்து வாங்கி 4,800 சதுர அடி நிலத்தை சுரேந்திரன் என்பவர் சேதுராமன் என்பவருக்கு விற்பனை செய்துள்ளார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த சொத்தை சேதுராமன் என்பவர் ஒரு செல்வராஜ் என்பவருக்கு விற்பனை செய்துவிட்டார்

என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2020ம் வருடம் செல்வராஜ் என்பவர் வாதிக்கு 4,800 சதுர அடி நிலத்தை கிரயம் செய்து கொடுத்துள்ளார். ஆனால் அந்த கிரய ஆவணம் தவறானது ஆகும். வாதி கிரயம் கொடுத்த 4,800 சதுர அடி நிலத்தை பொறுத்துதான் இந்த வழக்கு நடந்து வருகிறது. நான் தாவா சொத்தை 22.01.2011 தேதியில் சிவலிங்கம் என்பவரிடமிருந்து கிரயம் பெற்றுள்ளேன். சிவலிங்கம் என்பவர் குருமூர்த்தி என்பவரிடமிருந்து 07.04.2004ம் தேதி அந்த சொத்தை கிரயம் பெற்றுள்ளார். குருமூர்த்தி என்பவர் 27.02.1995 தேதியில் அந்த சொத்தை காலீப் என்பவரிடமிருந்து கிரயம் பெற்றுள்ளார். 15.03.1989 தேதியில் காலீப் என்பவர் சொத்தை சாந்தி தனஞ்ஜெயன், சுரேந்திரன் மற்றும் டாக்டர். சம்பு ஆகியோர்களுக்கு விற்பனை செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அந்த சொத்து தாவா சொத்திற்கு கிழபுறத்தில் உள்ளது. தாவா சொத்திற்கு கிழபுறம் விற்றதாக தவறாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சுரேந்திரன் பெயரில் 2001ம் வருடத்திலேயே பட்டா பெற்றுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. சேலம் மாநகராட்சியில் சுரேந்திரன் என்பவருக்கு சொத்தை வரைமுறைபடுத்தி கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் கிரயம் பெற்ற கிரயப்பத்திரத்துடன் வரைபடம் இணைக்கப்பட்டுள்ளது. அந்த வரைபடத்தில் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ள பகுதிதான் தாவா சொத்து ஆகும். அதற்கு வடக்கே சாலை செல்கிறது. வரைபடத்தின்படி மேற்கே செல்வராஜ் சொத்து உள்ளது. செல்வராஜ் என்பவர் காலீப் என்பவரிடமிருந்து சொத்தை கிரயம் பெற்றுள்ளார். சுரேந்திரன் என்பவரின் மனைவி டாக்டர்.பிரேமகுமாரி ஆவார். வரைபடத்தின்படி தாவா சொத்தின் கிழபுறம் பிரேமகுமாரி என்பவரது நிலம் உள்ளது. அந்த சொத்து சுரேந்திரன் பெயரில் உள்ளது. வரைபடத்தின்படி 60 X 80 நிலத்திற்கு வடபுறத்தில் கிழமேலாக 30 அடி சாலை செல்கிறது என்றால் சரிதான். நான் தாவா சொத்தை தவறாக கிரயம் பெற்றுவிட்டு வாதி கிரயம் பெற்ற சொத்து வேறு இடத்தில் உள்ளதாக தவறாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில்

எனக்கோ, குருமூர்த்தி மற்றும் சிவலிங்கம் ஆகியோர்களுக்கோ எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கிரயம் பெறுவதற்கு முன்பு தாவா சொத்திற்கு உண்டான வில்லங்க சான்றிதழ் பெற்று பார்த்தேன். அந்த வில்லங்க சான்றிதழ் என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2011 ம் வருடத்திற்கு முன்பே வில்லங்க சான்று பெற்று பார்த்தேன். 2011 ம் வருடத்திற்கு முன்பு நான் வில்லங்க சான்று பெற்றதை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்று எனக்கு தெரியாது. நான் தாவா சொத்தை உரிமை இல்லாதவர்களிடம் கிரயம் பெற்றுவிட்டு தற்பொழுது பொய்யாக எதிர்வாதம் செய்துவருகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

Taken down by me in open Court and dictated to the Typist by me and read over to the deponent and acknowledged by him/her to be correct.

Sd./- N. Ramakrishnan
I Additional District Judge,
Salem.